DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : தேவராஜன் | Father/Husband Name : பழனி |
| Age : 65 | Village : படந்தால் |
| Taluk : | Calling : கோவில் பூசாரி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9 Mar 2026 11:50

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

**முதல் விசாரணை** :-

1. நான் படந்தாலில் குடியிருந்து வருகிறேன். நான் சக்தி மாரியம்மன் கோவில் பூசாரியாக வேலை செய்து வருகிறேன்.

2. இவ்வழக்கின் சம்பவ இடமான சாத்தூர் வைப்பாறு நான் பூசாரியாக வேலை செய்யும் சக்தி மாரியம்மன் கோவிலின் பின்னால் உள்ளது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சுமார் 6,7 ஆண்டுகளுக்கு முன்னர் போலீசார் மேற்படி கோவிலில் வைத்து எழுதாத வெள்ளை தாளில் போலீசார் வந்ததற்கு அத்தாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தேன். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து, பார்வையிட்டார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்க அனுமதி கேட்டு, அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

3. நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் செய்யக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் போலீசார் வற்புறுத்தியதால் போட்டுக்கொடுத்தேன். மேற்படி வைப்பாற்றில் திருட்டு மணல் அள்ளுவது வழக்கம் என்றால் சரிதான். ஆனால் அதை நான் பார்ப்பதில்லை. இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur.